# அவசர கைப்பேசி எச்சரிக்கை

GET READY .govt.nz

**உங்கள் உயிர், ஆரோக்கியம் அல்லது சொத்து கடுமையான ஆபத்திலிருந்தால், ஒரு அவசர கைப்பேசி எச்சரிக்கை உங்கள் கைப்பேசிக்கு அனுப்பப்படும்.**

அவசர கைப்பேசி எச்சரிக்கையானது ஒரு செய்தி ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் உங்கள் கைபேசிக்கு அனுப்பப்படுவது. அது உங்களை எச்சரிப்பதற்காக உரத்த சத்தத்தை ஏற்படுத்தும்.

## எனக்கு ஒரு அவசர கைப்பேசி எச்சரிக்கை கிடைக்கப்பெற்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

என்ன செய்து கொண்டிருந்தீர்களோ அதை நிறுத்தி விட்டு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை கடைப்பிடியுங்கள்.

அவசர கைப்பேசி எச்சரிக்கை செய்திகள் கீழ்காணும் காரணங்களுக்கு மட்டுமே அனுப்பப்படுவது:

- உயிருக்கோ, ஆரோக்கியத்துக்கோ, அல்லது சொத்துக்கோ கடுமையான அச்சுறுத்தல் இருந்தாலோ அல்லது
- ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சோதனைக்காரணங்களுக்காக

உங்களுக்கு ஒரு எச்சரிக்கை கிடைக்கப்பெற்றால், அதை தீவிரமாக எடுத்து அது என்ன சொல்கிறதோ அதை செயல்படுத்துங்கள்.

எல்லா தொலைபேசிகளும் அவசர கைப்பேசி எச்சரிக்கையை பெறும் திறனுடையவை அல்ல, எனவே உங்களுக்கு ஒரு எச்சரிக்கை கிடைக்கப்பெற்றால், மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

## அவசர கைப்பேசி எச்சரிக்கையைப் பெறுவதற்கு நான் பதிவு செய்து கொள்ள வேண்டுமா?

இதற்கு பதிவு செய்யவோ அல்லது ஒரு செயலியை பதிவிறக்கம் செய்யவோ தேவையில்லை. எச்சரிக்கைகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே அனுப்பப்படுவதால், உங்கள் பகுதியில் அவசர நிலை ஏற்பட்டால் மட்டுமே உங்களுக்குக் கிடைக்கும்.

உங்கள் தொலைபேசி இயக்கத்தில் இருந்து, இவற்றை பெறும் தகுதியுள்ளதாகவும், அத்துடன், இலக்கு பகுதிகட்குட்பட்டதாகவும் இருந்தால், உங்களுக்கு எச்சரிக்கைகள் கிடைக்கும். உங்கள் தொலைபேசி எச்சரிக்கைகளை பெறும் தகுதி உள்ளதா என்பதை getready.govt.nz இலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

## யார் கைப்பேசி எச்சரிக்கைகளை அனுப்பலாம்?

அவசர கைப்பேசி எச்சரிக்கை செய்திகளை அனுப்பக்கூடியவர்கள்:

- தேசிய அவசரநிலை மேலாண்மை நிறுவனம்
- குடியுரிமை பாதுகாப்பு அவசர மேலாண்மை குழுக்கள்
- நியூசிலாந்து காவல்
- தீ மற்றும் அவசரநிலை நியூசிலாந்து
- சுகாதார அமைச்சு
- முதன்மை தொழில் அமைச்சு

## அவசர கைப்பேசி எச்சரிக்கை மற்றைய சேனல்களுக்கு மாற்றல்ல

அவசர கைப்பேசி எச்சரிக்கை உங்களை பாதுகாப்பாகவும் அவசரநிலையை தெரியப்படுத்துவதற்குமான மேலதிக வழிமுறை மட்டுமே. இந்த எச்சரிக்கைகள் ஏனைய எச்சரிக்கை முறைகளுக்கு மாற்றாகவோ அல்லது இயற்கை எச்சரிக்கையின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் மாற்றாது.

## தகவல்களை தெரிந்துகொள்ளும் வழிகள்




நீங்கள் எப்பொழுதும் ஒரு அவசரநிலைக்கு ஆயத்தமாக இருக்கவேண்டும், அத்துடன் நீங்கள் நடவடிக்கை எடுக்குமுன் உங்களுக்கு எச்சரிக்கை வரவேண்டும் என காத்திருக்கக்கூடாது. உங்கள் வாழ்க்கை ஆபத்தில் இருப்பதாக உணர்ந்தால், ஒரு அதிகாரபூர்வமான எச்சரிக்கை வரும்வரை காத்திருக்க வேண்டாம். உடனே நடவடிக்கை எடுக்கவும்.

தேவையான நேரம் எடுத்து உங்களுடைய அவசரகாலதிட்டத்தை அமையுங்கள். அது என்ன செய்ய வேண்டும், எங்கு போக வேண்டும், யார் உங்களுக்கு உதவுவார்கள் அத்துடன் யாருக்கு உங்கள் உதவி தேவைப்படும் என்பவற்றை உள்ளடக்கும். நீங்கள் ஒரு திட்டத்தை getready.govt.nz இல் ஆன்லைனில் உருவாக்கலாம்.

## எப்படி அவசர கைப்பேசி எச்சரிக்கை செயற்படுகிறது?




1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் பாதிக்கப்பட்ட பகுதி எது என நிர்ணயித்து எச்சரிக்கையை உருவாக்குகின்றனர்.
2. எச்சரிக்கை பொருந்தும் அதி உயர்ந்த கோபுரங்களில் இருந்து ஒலிபரப்பப்படும்.
3. பாதிக்கப் பட்ட பகுதியில் உள்ள திறன் உள்ள கைபேசி எச்சரிக்கையைப் பெறும்.

ஒரு அவசர நிலையில் கைபேசி மற்றும் இணைய போக்கு வரத்து வலையத்தில் அதிக சுமையை ஏற்படுத்தும் பட்சத்தில் அவசர கைப்பேசி எச்சரிக்கை ஒரு அர்ப்பணிப்பு சமிஞ்ஞையை பயன்படுத்துகிறது, இதனால் அவசர கைப்பேசி எச்சரிக்கை அவசரநிலையில் கூடிய நம்பிக்கை அளிக்கிறது.

நீங்கள் எந்த வலையத்தில் இருக்கிறீர்கள் என்பதில் அக்கறையில்லை. எந்த வலு உள்ள தொலைபேசியும் ஒலிபரப்பாகும் நேரத்தில் அந்த பகுதியில் நுழைந்தால் எச்சரிக்கையைப் பெறும்.

## நான் விருப்பப்பட்டால் இந்த அவசர கைப்பேசி எச்சரிக்கைகளை பெறுவதிலிருந்து விலகி கொள்ளலாமா?

அவசர கைப்பேசி எச்சரிக்கைகள் என்பது உங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது என்பதை பற்றியது என்பதால் இந்த அவசர கைப்பேசி எச்சரிக்கைகளை பெறுவதிலிருந்து நீங்கள் விலகி கொள்ள முடியாது. எச்சரிக்கைகள் குறிப்பிட்ட கைப்பேசிகளை இலக்காக வைத்து அனுப்பப்படுபவை அல்ல. அவை அபாயத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு அனுப்பப்படுபவை. அவசர கைப்பேசி எச்சரிக்கை உங்கள் கைப்பேசி எண்ணை பயன்படுத்துவதில்லை அல்லது உங்களை பற்றிய தகவல்களை சேகரிப்பதில்லை.

அவசர கைப்பேசி எச்சரிக்கையை பற்றி மேலும் தகவல்களுக்கு **getready.govt.nz** ஐ விஜயம் செய்யுங்கள்.